# 15. போருக்குப் பின்னரான தமிழ்ச் சமூகத்தின் பெண்களின் துன்பியல் நிலை : இலக்கிய நிலைகளோடு ஒப்பிட்டு நோக்குதல்

கலாநிதி சிவாணி சண்முகதாஸ்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
*shanshivany@yahoo.com*

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை பெண்களின் துன்பியல் நிலையானது பல்வேறு ஆய்வாளர்களால் ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளது. பல்வேறு இலக்கியங்களில் பெண்கள் பற்றியும் அவர்களின் துன்பநிலை சார்ந்தும் எழுதப்பட்டுள்ளன. சங்க கால இலக்கியம் முதல் இன்றுவரை பெண்களின் துன்பியல் பேசப்படாத மொழிகளே இல்லை. போருக்குப் பின்னராக ஒரு தமிழ்ச்சமூகத்தில் பெண்களின் துன்பம் எவ்வாறு உள்ளதென்பது தொடர்பாக வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு விதமாக எழுதப்பட்டிருந்த போதிலும், இலக்கியங்களில் கூறப்பட்ட பெண்களின் துன்ப நிலையையும், நடைமுறையில் ஒரு போர் முடிந்த சமூகத்தில் பெண்களின் துன்ப நிலைமையும், ஒப்பீடு செய்து, பெண்களுக்கூடாக, அவர்களின் நிலை ஆய்வு செய்யப்படவில்லை. இவ் ஆய்வு இடைவெளியைக் குறைப்பதற்காக இவ் ஆய்வானது போருக்குப் பின்னரான வடக்குத்தமிழ்ச்சமூகத்திலிருந்து நோக்கமுறை மாதிரி எடுப்பினை அடிப்படையாகக் கொண்டு 25 பெண்களிடம் தரவுகள் சேகரிக்கப்பட்டு, உட்பொருள் குறியீடு பகுப்பாய்வின் மூலம் 10 வகையான பெண்களின் துன்பியல் நிலைமையைக் கண்டுபிடித்து இலக்கியங்களில் கூறப்பட்ட பெண்களின் துன்பநிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளது. ஆய்வு முடிவின் படி இலக்கியங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கூறப்பட்ட துன்பநிலை இன்னும் தீர்ந்தபாடில்லை என்பதே பெண்களின் கருத்தாகவும், கல்வி வளர்ச்சி, சுயகல்வி, சுதந்திரக்கல்வி என்பதில் பெண்கள் மகிழ்ச்சியாக இருப்பினும் குடும்பத்தை தனித்துச் சுமத்தல், குடும்பத்தில் நிலவும், பெண்ணடிமை நிலை, போதைக்கு அடிமையான குடும்ப அங்கத்தவரால் துன்பம், இறந்தவருக்காகவும், காணாமல் போனோருக்காகவும் வருந்துதல், பாலியல் துஸ்பிரயோகம், வறுமை, நோய்களின் தாக்கம்,

குழந்தைக ளின்மை, சீதணப் பிரச்சனைகள், சில வேலைத்தலங்களில் பெண்சமத்துவமின்மை போன்றவற்றால் உருவாகியுள்ள பல பிரச்சனைகளைத் துன்பங்களாக அனுபவித்துக் கொண்டிருப்பதாகவும் போருக்குப் பின்னர்த் தனித்து வாழும் பெண்களிடையே, காணாமல் போனோரைத் தேடுதல், மதுபாவனைக்கு அடிமையான கணவர், என பல்வேறு துன்பங்கள் காணப்படுவதாகவும் ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. எப்போதும் மனச்சுமையோடும், துன்பங்களோடும் வாழ்ந்து கொண்டு அதனைத் தீர்த்துக் கொள்ளும் பெண்கள் ஒரு புறமும் நாகரிக மோகத்திற்கு அடிமையாகப் பண்பாடு, சமூக விழுமியங்களைக் கருத்தில் கொள்ளாது மேலைத்தேய நாகரிக வளர்ச்சிக்கு அடிமையாகிய பெண்கள் மறுபுறமாகவும் போர் முடிந்த தமிழ்ச் சமூகத்தில் காணப்படுகின்றன. ஆய்வு முடிவின் படி பெண்களின் உள்ளார்ந்த நிலையினை வெளிக்கொணர்ந்து துன்பியல் நிலையினை சீரமைப்பதற்குப் பல்வேறு செயற்பாடுகளைப் பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் முன்னெடுக்க வேண்டும் என்பது இவ் ஆய்வின் வேண்டுகோளாகும்.

**திறவுச் சொற்கள்** : தமிழ்ச்சமூகம், தமிழ் இலக்கியங்கள், பெண்களின் துன்பநிலை, பொருள் குறியீடு பகுப்பாய்வு, போருக்குப் பின்னரான வடக்கு,

## ஆய்வுப் பின்னணி

பெண்கள் ஒரு சமூகத்தின் பல்வேறுபட்ட பரிமாணங்களுக்குப் பங்களிப்புச் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான அடிப்படையானது அந்நாட்டின் சமுதாயத்திலிருக்கும் ஒட்டு மொத்தமான குடும்பங்களிலிருந்து உருவாகின்றது. சமூகத்தில் பங்களிப்புச் செய்யும் குடும்பங்களினூடாக நல்ல பிரஜைகளை ஒரு நாட்டுக்கு வழங்குவதிலிருந்து பொருளாதாரம், சமூதாயம், கலாச்சாரம், நிர்வாகக் கட்டமைப்புப் போன்ற பல்வேறுபட்ட விடையங்களில் பெண்கள் அதிக பங்களிப்பினைச் செய்கின்றனர். ஒரு சமூகம் தனது கலாச்சாரத்தோடும் கட்டுக் கோப்போடும், சிறப்பாக நிலைத்திருக்க வேண்டுமாயின் அச் சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு அவசியமாகும். பெண்கள் தனியே பங்களிப்புச் செய்பவர்களாக மட்டுமன்றிப் பங்களிப்பவர்களின் பின்னே முக்கிய ஊக்கப் படுத்துபவர்களாகவும் உள்ளனர். பெண்களைச் சமூகம் எத்தகைய பார்வையோடு உற்று நோக்குகின்றதோ, அவற்றைப் பொறுத்தே

அவர்களின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படுகின்றது. பெண்கள் இன்று சாதிக்காத துறை இல்லையெனும் அளவுக்கு அவர்களுடைய பங்களிப்புக்கள் வளர்ச்சியடைந்துள்ளன. பெண்கள் ஆண்கள் போல அல்ல, பௌதீக உடல் அமைப்பிலும், மனவலிமையிலும் ஆண்களை விட பெண்கள் குறைந்தவர்களாகவே கூறப்பட்டுள்ளனர். ஆண்களைச் சார்ந்தே பெண்கள் வாழவேண்டும் என்னும் சிந்தனையும் இருந்தது. காலப்போக்கில் பண்டைக்காலச் சிந்தனைகளை மாற்றுவதாகவும் புதிய சிந்தனைகளை உருவாக்குவதாகவும், பல்வேறுபட்ட சாதனைகளைப் பெண்களிடமிருந்து சமூதாயம் பெற்றுக் கொண்டது.

யாழ்ப்பாணம், பண்பாட்டிற்கும் கலாச்சார இறுக்கங்களுக்கும் சமூக விழுமியங்களுக்கும் அடையாளப்படுத்தக்கூடிய பிரதேசம், பல்வேறு அறிஞர்கள், யாழ்ப்பாணப் பண்பாடு, கலாச்சாரம் பற்றி வியந்து போற்றியிருக்கின்றார்கள். குறிப்பாகக் கலாச்சாரத்தில் ஊறித்திளைத்த தமிழ்ப் பெண்களையும் யாழ்ப்பாணத்தில் காணலாம் என்னும் அபிப்பிராயங்கள் கூட வேற்று நாட்டுத்தமிழர்கள் மத்தியில் உள்ளது. உலகலாவிய ரீதியில் பெண்களின் முன்னேற்றம் பேசப்பட்டுக் கொண்டு இருப்பினும், யாழ்ப்பாணத்தமிழ் மரபில் உருவாகிய சிறந்த பெண்கள், அவர்களின் சாதனைகள் சில சில இடங்களில் உற்று நோக்கப்படுகின்றன. இலக்கியங்கள், பெண்கள் சுதந்திரம், அவர்களின் பங்களிப்பு, முன்னேற்றம், கலாச்சாரம் தொடர்பாகப் பல்வேறு விதமான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றன. பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டும் என்றும் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் சமூகம் செய்து கொடுக்க வேண்டும் என்றும் சங்க கால இலக்கியங்கள் வலியுறுத்தியுள்ளன. இன்றைய இருபதாம் நூற்றாண்டில் கூட பல இலக்கியங்கள் பெண் விடுதலைக்காகவும், பெண்கள் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காகவும் பாடுபடுகின்றன. ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகக் கூறப்பட்ட இலக்கியங்களில் பெண்கள் எவ்வாறு முன்னேற்றமடைய வேண்டும் என்பது இன்று அடையப்பட்டிருக்கின்றதா? என்பது ஆய்வுக்குட்பட்டதாகும். இலக்கியங்களில் கூறப்பட்ட அந்த முன்னேற்றமானது பெறப்பட்டிருக்குமாயின் இன்னும் பெண் விடுதலைக்கான புதிய இலக்கியங்களின் தோற்றமும், பெண் சமுத்துவத்திற்கான நிர்வாகக் கட்டமைப்பும் அவசியமற்றதாகும். மாறாக இவை இன்றும் நடைமுறையில் காணப்படுகின்றதெனில், பெண் சுதந்திரம் என்பது பெறப்படாத ஒன்றாகவே இன்னும் நிலவுகின்றதா?

யாழ்ப்பாண மரபில் உருவாகிய பெண்கள். சர்வதேச உலகம் வியக்கும் அளவுக்கு வியந்து பேசப்பட்டவர்களாக இருந்த போதிலும். இன்னும் பெண் சுதந்திரம் தேவை. பெண்களை விடுதலை பெற்று வாழவிடுங்கள் போன்ற கருத்துக்கள் பல்வேறு ஆண் எழுத்தாளர்களிடமிருந்து உருவாகின்றதெனில் இலக்கியங்களில் கூறப்பட்ட பெண் விடுதலை. துன்பநிலை மீண்டதா என்பதை ஆய்வு செய்தல் அவசியமானதாகும்.

## ஆய்வு இடைவெளி

பெண்கள் தொடர்பாகப் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன குறிப்பாக இலக்கியத்தில் பெண்கள், புலம் பெயர் வாழ்வியலில் தமிழ்ப் பெண்கள் (சந்திரவதனா 2005). தமிழ் இலக்கியத்தில் பெண்மொழி (மனோன்மணி 2011). குறுந்தொகைப் பாடல்களின் பெண்மொழி (செல்வ அம்பிகை 2014). போருக்குப் பின்னரான இலங்கைச் சூழலில் பெண்ணிற்கான நியாயங்கள் (De Mel Neloufer, 2013) பெண்களுக்கெதிரான வன்முறைகள் (Sepail grunge, Brenda Roche, and crishna cafallo, 2012). என்பவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். இலக்கியப் பனுவலை மையமிட்டு அமெரிக்கப் பெண்ணியத் திறனாய்வானது சமூகத்தில் பெண் ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றாள் பெண்ணடிமைத்தனம் பல்வேறு வடிவங்களிலும் செயல் நிலைகளையும் கொண்டுள்ளது எனக் கூறுகின்றது. பெண்ணியத் திறனாய்வானது உளவியல் பகுப்பாய்வு முறையில் பெண்ணியத்தை விளக்க வேண்டும் எனக் கூறுகின்றது. சொற் சிதறல்களாக பெண்ணுக்குள்ளே இருந்து வெளிப்படும் குறியீடுகள் வார்த்தைப் பிரயோகங்களினூடாகப் பார்க்கப்பட வேண்டும் எனப் பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வு கூறுகின்றது.

மேற்கூறப்பட்ட ஆய்வுகள் வெவ்வேறு கோணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெரும்பாலான பெண்ணியம் சார்ந்த விடயங்கள் புத்தகங்களாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன இலக்கியங்களில் பெண்கள் அனுபவித்த கஷ்டங்கள் தீர்த்துவிட்டனவா என்று ஒப்பிட்டு நோக்கும் ஆய்வுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. இலக்கியங்களில் பெண்கள் அனுபவித்த துன்பங்கள் புத்தகங்களிலும் பொருத்தமான ஆய்வு முறையூடாக வெளிப்படத்தப்படாமலும் காணப் படுகின்றன. தற்காலத்தில் பெண்கள் எவ்வாறு உள்ளனர்? பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கூறப்பட்ட பெண்களின் துயரங்கள் முடிந்து விட்டதா அல்லது அது இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றதா? என

ஆய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் இலக்கியங்களில் பெண்கள் பற்றிய துன்பகரமான நிகழ்வுகள் சொல்லப்பட்டுப் பின்னர்த் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் அத் துன்பத்தைக் களைவதற்கான வழிகளையும் கட்டாயத்தையும் வெளிப்படுத்தியுள்ளன. எனவே இவ்வாறு பெண்களின் துன்பம் தீர்ந்துவிட்டதா இல்லையா என்று பார்க்கப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. போருக்கு பின்னர் நிலவுகின்ற சூழலில் பலவிதமான ஒப்பிட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஏனெனில் போரின் விளைவால் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள் போய் நியாயங்கள் உருவாகியுள்ளதா எனப் பார்க்கப் பட்டிருப்பினும் இலக்கியத்தில் கூறப்பட்ட துன்பியல் நிலை இல்லாது போயுள்ளதா அல்லது இன்னும் அது தொடர்கிறதா என்னும் ஆய்வின் கட்டாயத் தேவை காரணமாக இவ் ஆய்வானது போருக்குப் பின்னரான தமிழ் பெண்களின் துன்பியல் நிலையினை இலக்கியத்தில் கூறப்பட்ட நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்க முயற்சி செய்கின்றது. பின்வரும் ஆய்வு வினாவினூடாக இந்நோக்கம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

போருக்குப் பின்னரான இலங்கையின் தமிழ் பெண்களின் துன்பியல் நிலைமை இலக்கியத்தில் கூறப்பட்ட நிலைமையோடு ஒத்துப்போகின்றதா? அல்லது குறைந்துள்ளதா?

## ஆய்வு நோக்கங்கள்

1. இலக்கியங்களில் பெண்களின் துன்பியல் நிலை தொடர்பான கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்தல்.
2. யாழ்ப்பாணப் பெண்களின் துன்பநிலை தொடர்பான நடைமுறை நிலமைகளைப் பெண்களூடாக அறிந்து வெளிப்படுத்தல்.
3. வெளிப்படுத்தப்பட்ட முடிவுகளையும் இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆராய்தல்.

## இலக்கியத்தில் பெண்களின் நிலைமை

வரலாற்று நிலையில் தமிழ்ச்சமூக அமைப்பில் பெண்ணடிமைத் தனம் எவ்வாறு இருந்தது? என்பதைச் சங்கப்பாடல் பதிவு செய்கிறது.

**அணில் வரிக் கொடுங்காய்**
**வான் போழ்ந்திட்ட**
**காழ் போல் நல்வினர் நறு நெய் தீண்டாது**
**அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்**
**வென் என் சாந்தொரு புளிப்பெய்து அட்டவேளை**

**வெந்தை வல்சியாகப்**
**பரல்பெய் பள்ளிப்பாயின்று வதியும்**
**உயவல் பெண்டிரோம் அல்லோம் மாதோ......**
**............எமக்கு**
**நன்னிரும் பொய்கையும், தீயம் ஓரந்தே"**

**(புறநானூறு புறம்246)**

இங்கு மனைவியானவள் கணவனின் இறப்புக்குப் பின்னர்க் கைம்பெண் விரதத்தை அனுபவிக்கும் கொடுமையின் காரணத்தால் தான் உடன்கட்டை ஏறுகின்றேன். தன் கணவன் மீது கொண்ட பேரன்பில் அல்ல என்று கதறுகின்றாள். அன்றைய கைம் பெண்கள் நோன்பு கொடுமையாக இருந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன.

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர்**
**காரணம் என்ப"**

என்று தொல்காப்பியரும் பொருளதிகாரத்திலும் பண்டைக் காலத்தில் பெண்கள் ஆண்களால் ஏமாற்றப்பட்டதைக் குறிப்பிடுகின்றார். அதேவேளை கற்பென்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான தாகவே குறிப்பிடுகின்றார்.

**"கற்பெனப்படுவது கரணமொடு புணர**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"**

இங்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான கடமை ஒரு குடும்பத்தைத் தாங்கிச் சுமப்பதில் இருப்பதாக அன்று கூறப்பட்டது. பெண்கள் முழுமையாகத் தமது கடமைகளை வீட்டிற்குள் இருந்தே பணியாற்றும் போது கூட அன்றைய காலத்தில் ஆண்களால் சரிசமமான கடமை உள்ளவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. சங்க காலத்தில் கணவரைப் பிரிந்த பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் உரிமைகளைப் பெற்றிருக்கவில்லை. அணிகலன்கள், மலர்கள். சூடுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

**"எம்மினும் பேர் எழில் இழந்து வினை எனப் பிறர் மனை**
**புகுவர் கொல்லோ அணியில் தானோ. பூவில் பெண்டே"**

இங்குக் கணவனை இழந்த பெண்கள் இரக்கத்திற்கு உரியவர்களாகப் பார்க்கப்பட்டார்கள். இதே போன்ற நிலைப்பாடு போரினால் கணவனை இழந்து தவிக்கும் எத்தனையோ பெண்கள்

இரக்கத்திற்கு உரியவர்களாகப் பார்க்கப்படவேண்டிய சூழலில் இங்கு உள்ளனர்.

மிகவும் மென்மையாகச் சித்தரிக்கப்பட்ட பெண்கள் வாழ்ந்த பண்டைக் காலத்தில் மூதின் முல்லைகள் என்று சித்தரிக்கப்பட்ட வீரம் ததும்பப் பெண்கள் வாழ்ந்த சரித்திரத்தினைப் புறநானூறு கூறுகின்றது.

**"கெடுக சிந்தை : கடிது இவர் தனிவே**

**மூதிர் மகளிராதல் தகுமே"**

**"ஒரு முகன் அல்லது தகுமே இல்லேள்**
**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே"**

என்று பெண்களின் வீரத்தைப் பாராட்டிக் கொள்ளும் மாண்பைக் காணமுடிகின்றது.

பண்டைக்காலத்தில் ஆணுக்குச் சமமான பல பெண்கள் கல்விப்புலமை பெற்றவர்களாகவும் இலக்கியப் படைப்பாளிகளாகவும் இருந்திருக்கின்றனர். சங்க காலத்தில் கல்விச் சுதந்திரமும், படைப்புச் சுதந்திரமும் பெற்றுள்ளனர். ஆனால் ஓதலில் பிரிவு ஆண்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது இலக்கியங்களின் மூலம் தெரிய வருகின்றது.

கல்விகற்க ஆண்களோடு ஒப்பிடும் போது பெண்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருந்தமைக்கான காரணம், பெண்கள் தாமாக விரும்பிக் கற்பதற்கான சுதந்திரம் அவர்களிடம் இல்லை. அதனை மீறிக் குறிப்பிடப்பட்ட சில பெண்கள் சிறந்து விளங்கி யிருக்கின்றனர். ஆண்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் ஆண்களுக்கு அறிவுரை வழங்கக்கூடிய திறமையும், உரிமையும் பெற்றவர்களாகப் பெண் வாழ்ந்த தன்மையையும் சங்க காலத்தில் போற்றப்பட்ட ஔவையாரால் அறியமுடிகிறது. பிற்காலத்தில் அவரது கல்விப்புலமை, ஒழுக்கம், தெய்வ நம்பிக்கை, ஆண்களுக்கு அறிவுரை வழங்கும் திறமை பெற்றிருந்த தன்மைகளும் விதந்து பாரட்டப்பட்டன. எனவே பெண்கள் ஆலோசனை வழங்குபவர்களாகவும் அறிவுரை கூறுபவர்களாகவும் இருந்ததோடு அதற்காக அவர்கள் போற்றப் பட்டதற்கான வரலாறு உண்டு.

சங்க காலத்தில் ஐவகை நிலங்களில் தொழில் புரியும் மக்களில் அவரவர் புவியியல் சார்ந்த பணிகளில் ஈடுபட்டனர். தினைப்புனம் காத்தல், மோர் நெய் விற்றல், உழவு செய்தல், மீன் -உப்பு விற்றல்

போன்ற பணிகளைச் செய்து வந்தனர். உழைக்கும் பெண்கள் இலக்கியங்களில் முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. உழைக்கும் மகளிர் மரபிலக்கியங்களைப் பொறுத்தவரை ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர்.

பெண்ணினுடைய பயன்பாடு பற்றிக் கலித்தொகைப் பாடல் ஒன்று விளக்கம் தருகின்றது. பெண் பிறந்த வீட்டிற்குப் பயன்தருபவள் அல்லள். அவள் ஆடவன் ஒருவரோடு இணைந்தால் பயன் உடையவளாவாள். சந்தனம் மலையிலே வளர்ந்தாலும் அது அந்த மலைக்குப் பயன்படுவதில்லை. தன்னை அரைத்து பூசிக் கொள்பவருக்கே பயன்படுகின்றது. முத்து கடலிலே விளைந்தாலும் அது அந்த கடலிற்கு எவ்விதப் பயனையும் தருவதில்லை. தன்னை மாலையாக்கி அணிபவருக்கே பயன்தருகின்றது. இசையானது யாழிலிருந்து தோன்றினாலும் அந்த யாழுக்கு எவ்விதப் பயனுமில்லை. அதனைக் கேட்பவர்க்கே பயன்தருகிறது. இது போலத்தான் பெண்ணும் தான்தோன்றிய இடத்தில் பயன் தருபவள் அல்லள் என்ற கருத்தும் கூறப்பட்டுள்ளது. இயற்கையிலேயே சந்தனம் முத்து யாழ் முற்றும் தத்தம் நிலையிலே இயங்க வாய்ப்பற்றவை. ஆனால் பெண்ணோ அப்படிப்பட்டவள் அல்ல. அவளிற்கு இயற்கையிலே இயங்கும் ஆற்றல் உண்டு. ஆனால் பெண் வீடு என்ற நிலையிலே குறுகிய வட்டத்துள் மட்டுமே இயங்க வேண்டியவளாக பயன்தருபவளாக இருக்க வேண்டுமென அக்காலத்தவர் எண்ணினார். கணவனோடு அவள் வாழும் நிலையில்தான் சிறப்பு பெறுவாள் என வலிந்துரைக்க முற்பட்டனர்.

அழகிய பெண்ணைத் தேடிச்சென்று குடும்பத்தைக் குலைத்து வாழ்ந்த ஆண்களின் தவறான நடத்தையைச் சுட்டிக் காட்டாத இலக்கியங்கள் ஆண்களின் முறைகேட்டிற்குப் பெண்கள்தான் காரணம் எனக் கூறியது.

ஆணின் பரத்தமை ஒழுக்கத்தைக் கண்டிக்காமல் பொறுத் திருக்கும் பெண் கற்புடையவள் என இலக்கியத்தில் போற்றப்பட்டாள். பரிபாடல் (20) வரும் செய்தி மூலம் இதனை விளக்கமுடியும்.

**“சேக்கையினியார்பாற் செல்வான் மனையாளற்**
**காக்கை கடிந்தொழுகல் கூடுமோ கூடா**
**தவவுடைய மங்கையார் சான்றான்மை நசான்றார்**
**இகழிங் கேள்வரை யேத்தியிறைஞ்சுவார்”**

மேற்காட்டிய பாடல் அடிகள் ஆண் பரத்தையிடம் சென்றுவிட்டால் அதற்காக அவனைக் கடிந்துரைப்பதும், நீக்கி வாழ்தலும் மனைவியாற் செய்ய முடியாதவை. சால்புடைய கற்புடைய பெண்கள் தம்மைக் கணவர் எவ்வாறு இகழ்ந்தாலும் அவரைப் போற்றி வாழ்வர். என விளக்கம் கூறுகின்றது. நற்றிணை 247ஆம் பாடலில் இதே போன்ற ஆணை ஏத்தி வழிபட வேண்டியவள் பெண் எனக் கூறப்படுகின்றது.

சிலப்பதிகாரத்திற்குப் பின்னர் எழுந்த மணிமேகலையிலும் பரத்தமை ஆடவர்க்கு இயல்பான ஒழுக்கம் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டமை பெறப்படுகிறது. பரத்தமை ஒழுக்கமுடைய கணவன் புகழப்படுகின்றான். பரத்தமை ஒழுக்கமுடைய கணவனை ஆதிரை கண்மனி போன்றவள் என்று புகழப்படகின்றாள். பரத்தமையை ஒழிப்பதற்குப் பெண்கள் துறவு பூணுவதே வழியெனப்படுகின்றது. ஆண்களின் பெண் மோகத்திற்கு ஊழ்வினையே ஏதுவாகும் என்று போலி விளக்கம் கூறப்படுகின்றது. இவ்வுலக வாழ்க்கை நிலையிலே அறிவும் பொருளும் வளமும் கொண்ட ஆண்மகனின் ஒழுக்கச் சீரகேட்டிற்கு அவனது மன அடக்கமின்மையே காரணமாகும். ஆனால் அதை இலக்கியங்கள் எடுத்துக் கூறவில்லை. ஆணின் குற்றத்திற்குப் பெண்ணே ஏதுவாகக் கொள்ளப்பட்டாள். பெண்ணின் அழகுதான் ஆணின் ஒழுக்க சீர்கேட்டிற்கு வழிவகுத்தது என விளக்கம் கூறப்பட்டது. இதனால் பெண்களை வெறுக்க வேண்டும் என்ற ஒரு அறிவுரை கூட ஆணுக்குக் கொடுக்கப்பட்டது.

இரட்டைக் காப்பியங்களுக்குப் பின்னர்த் தோன்றிய நீதி நெறி புகட்டும் இலக்கியங்கள் பெண்களை மேலும் இழவுபடுத்தப் பல செய்திகளைத் தொகுத்துக் கூறின . திருக்குறளில் பெண்வழிச் சேறல் எனும் பகுதியில் உள்ள குறள்கள் பெண்களை இழிவுபடுத்துபனவாக உள்ளன.

"அறிவினை ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண் ஏவல் செய்வார்கள் இல்"

என்ற குறள் உச்ச நிலையில் பெண்ணுக்கு ஏவல் செய்யும் ஆணைப் பழித்துரைக்கிறது பெண்ணின் தலைமைத்துவம் அக்காலத்தில் இழிவு செய்யப்பட்டுள்ளது. இல்லாளுக்குத் தாழ்ந்து நடக்ககூடாது என்ற திருக்குறள் நீதி பேசுகிறது. நாலடியார் செய்யுள் ஒன்று பெண் கல்வியைப் பற்றிக் கூறுகிறது.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லயம்யாம் என்று நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு"

தலைமையரின் அழகும் கோடிய ஆடையின் கொடுந் திரையின் அழகும் மஞ்சளால் வந்த அழகும் அழகல்ல. நெஞ்சத்தின் கண்ணுள்ள நடுவுநிலைமையால் நல்லேம் யாமென்று தாந் தம்மை அறியப்படுங் கல்வி அழகே ஒருவர்க்கு உண்மையான அழகாகும். இவ்வாறு பெண்கள் விடுதலை பெறுவதற்கும், துன்பநிலை தொலைவதற்கும் பெண்கல்வியின் முக்கியத்துவம் பற்றி இலக்கியங்கள் பேசின.

## ஆய்வு முறைமை

இவ் ஆய்வானது பண்பியல் சார்ந்த ஆய்வு முறையைப் பின்பற்றி ஆய்வு வினாக்களுக்கு விடை காண முயல்கின்றது. இங்கு ஆய்வுக்கான தரவுகள் தமிழ்ப் பெண்களிடம் இருந்து அவர்களுடைய உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தும் ஆய்வு என்பதால் எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்தும் ஆய்வு முறையே பொருத்தமானது என ஆய்வாளர் கருதுகின்றனர் (Lincoln, Y. S., & Guba, E, Rust, R. T., & Cooil, B. (1994) ;Strauss, A. (1995); Silverman, D., & Marvasti, A. (2008).

## மாதிரி எடுப்பும் தகவல் சேகரிப்பும்

தரவுகள் 25 பெண்களிடம் இருந்து ஆழமான கருத்துக்களையும் பெண்களின் துன்பியல் நிலை தொடர்பாக அவர்களுடைய கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதன் மூலமும் தரவுகள் ஆழ்ந்த நேர் காணல் மூலம் பெறப்பட்டது. குறிப்பிட்ட தரவு சேகரிப்பு முறையானது ஆழமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஏனைய ஆய்வாளர்கள் பின்பற்றிய முறைமைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. இவ் ஆய்வுக்கான மாதிரி எடுப்பானது நோக்கம் சார் மாதிரி எடுப்பு முறை நுட்பத்தைப் பின்பற்றி இருக்கின்றது. இவ் ஆய்வின் நோக்கம் பொதுமைப்படுத்துவதற்கு மாறாக குறிப்பிட்ட ஒரு சமூக நிலையினை வெளிப்படுத்துவதாக மட்டுமே அமைந்திருக்கின்றது (Corbin & Strauss 2008).

தரவுச் சேகரிப்பின் போது ஒவ்வொரு பெண்ணும் பிரத்தியேகமாக அவரது துன்பியல் நிலைமைகள் தொடர்பாகக் கேட்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக நீண்ட நேர்காணல் மூலம் பதிலளித்தனர். அவர்கள்

சுதந்திரமாகத் தமது எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு நேர்காணலும் இலத்திரணியல் பதிவு முறையில் பதிவு செய்யப்பட்டு ஒத்த இணைந்த வார்த்தைப் பிரயோகங்களை ஒழுங்குபடுத்தும் தரவுப் பகுப்பாய்வு முறையூடாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. (Lincoln, Y. S., & Guba, E, Rust, R. T., & Cooil, B. (1994) Strauss, A. (1995) Silverman, D., & Marvasti, A. (2008). ஒத்த சொற்களை ஒன்றிணைக்கும் பகுப்பாய்வு ஒழுங்கில் முதலில் பெண்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் பந்திகளாக்கப்பட்டு பந்திகள் ஒவ்வொன்றும் ஒத்த இயல்பான வாக்கியங்களின் வெளிப்பாடு குறியீட்டு வடிவமாக வெளிப்படைப் பகுப்பாய்வு செய்யப்பட்டு நடு ஊடு வகையான குறியீட்டு வடிவம் கொடுக்கப்பட்டு இறுதியாக வகைப்பாட்டுக் குறியீடாகப் பெண்களின் துன்பியல் வகைகள் வகைப்படுத்தப் பட்டுள்ளன (Strauss & Corbin 1990). பகுப்பாய்வின் ஆரம்பத்தில் 54 வெளிப்படை குறியீடும் இரண்டாவது நிலைப் பகுப்பாயவில் 20 நடு ஊடு வகையான குறியீடுகளும் இறுதியாக 10 பெண்களின் துன்பியல் நிலை வகைகளும் முடிவுகளாகப் பெறப்பட்டுள்ளன.

## ஆய்வின் நம்பகத்தகு தன்மையும் நேர்மைத்தகவும்

பண்பியல் சார் ஆய்வு முறையில் ஆயிவின் நம்பகத்தகு தன்மையும் நேர்மைத்தகவையும் வெளிப்படுத்தும் விதத்தில் கடந்த கால ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட வேண்டுகோளை ஆய்வாளர் நிறைவேற்றியுள்ளார் (Lincoln and Guba, 1985; Silverman and Marvasti (2008). ஆய்வாளர் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதற்கு ஆய்வாளர் மிகச்சரியான தரவுப் பதிவுகளை மேற்கொண்டு அவற்றைப் பத்திரப்படுத்தி எழுதி முடிக்கப்பட்ட தரவுகள் இலத்திரணியல் பதிவேடுகள் பிறிதொரு நபரால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. பண்பியல் ஆய்வு முறையில் நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளர் ஒருவரால் இத்தரவுகள், தரவு முடிவுகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு அவரது திருத்தங்கள் ஏற்றுகொண்டு ஆய்வு தொடரப்பட்டது. ஆய்வாளருடைய நோக்கமானது பெண்களுக்கு முழுமையாக விளங்கப்படுத்தப்பட்ட பின்னரே தரவு சேகரிக்கப்பட்டது (Silverman & Marvasti, 2008).

ஆய்வின் நேர்மைத்தகவினை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வாளர் பெறப்பட்ட தரவுகளை மீளவும் தரவு சேகரிக்கப்பட்டவரிடம், வெளிப்படுத்தி அவற்றின் பொருத்தமான தன்மையினை உறுதிப்படுத்தி

யுள்ளார். தரவு சேகரிக்கப்பட்டவர்களிடமிருந்து முடிவுகள் எவ்வாறு சொல்லப்பட வேண்டும் என ஆராயப்பட்டதோடு முடிவுகளில் அவர்கள் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தினையும் ஆய்வாளர் ஏற்றுக் கொண்டுள்ளார். பின்னர் ஆய்வாளர் முழுத்தரவுகளையும் மீளவும் பரிசீலித்து அனைத்துத் தரவுகளும் பொருத்தமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொண்டனர். இங்குத் தரவுச் சேகரிப்பானது ஆய்வுக்கான தரவு பெறப்பட்டது தரவு போதுமானது என ஆய்வாளரால் உணர்ந்து கொள்ளப்பட்ட போது நிறுத்தப்பட்டது.

இவ் ஆய்வானது முதலாம் தரத் தரவுகளையும் இரண்டாம் தரவுகளையும் பயன்படுத்தியுள்ளது முதலாம் தரவுகளாவன இலக்கிய நூல்களாகவும் இலக்கிய நூல்களில் பெண்களின் துன்பியல் நிலைமைகளினை வெளிப்படுத்திய ஆய்வுக் கட்டுரைகளாகவும் புத்தகங்களாகவும் பயன்படுத்தப்பட்ட அதேவேளை முதலாம் தரத் தரவுகளாகப் பெண்களின் துன்பியல் நிலை தொடர்பாகப் பெண்களிட மிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டன.

இவ் ஆய்வவுக்கான சனத்தொகை ஆனது போருக்குப் பின்னராக வட இலங்கையில் வாழும் தமிழ்ப் பெண்களுக்காகவும் பெண்களின் துன்பியல் நிகழ்வுகளைச் சித்தரிக்கும் தமிழ் இலக்கியங்களாகவும் காணப்படுகின்றன.

இவ் ஆய்வின் தரப் பகுப்பானது தரவு பகுப்பாய்வானது "உட்பொருள் பகுப்பாய்வு முறைமை முலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது ஆய்வு வினாவிற்கு விடை கூறும் நோக்கோடும் ஆய்வு நோக்கத்தை அடைந்து கொள்ளும் நோக்கோடும் "உட்பொருள்" குறியீடுகள் மூலமாகவும் பகுப்பாய்வு செய்யப்படடன.

## தரவுப்பகுப்பாய்வு

ஆண்களுக்கு நிகராகப் போர்க்காலத்தில் ஆயுதம் தாங்கிய பெண்களின் வீரமும். கணவன். பிள்ளைகளைப் போருக்கு அனுப்பிப் பறி கொடுத்து ஆற்றொணாத்துயரத்தில் அழுது புலம்பும் பெண்கள் நிலை பற்றி வியந்தெழுதல் வேண்டும்.

> **"எம் இனத்துக்காக என் கணவனையும் இரண்டு பிள்ளைகளையும் இழந்தேன். என் மகனைக் காணாமல் தேடி அலைகின்றேன்....... சொல்லமுடியாத சோகம் என் நெஞ்சைப் பிழிகிறது. இராசாத்தி.... நானும் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் இத்தேசத்தில் ......**

பெண்ணாய்ப் பிறந்தது பாவம் என்றும் முற்பிறப்பில் செய்த பிழைகளுக்கான தண்டனையாகப், பெண் உருவம் எடுத்ததாகவும் பல பெண்கள் புலம்புகின்றார்கள். பல பெண்களின் இடர்ப்பாடு நிலைகள் தொடர்பாகத் தரவுகளில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளன.

> **"சொந்த இடங்களுக்குச் செல்வதற்குப் போராட வேண்டிய துர்ப்பாக்கியசாலிகளாகி விட்டோம், நிரந்தரமான வருமானங்களிலில்லை, எவ்வளவு காலம் வாடகை வீடுகளில் குடியிருக்க முடியும்.... பல மாதங்களாகப் போராடியும் எம் சொந்த இடங்களுக்குப் போக முடியவில்லை குழந்தைகளையும், வயோதிகர்களையும் வீதியில் வைத்துக் கொண்டு அல்லல் படுகின்றோம்."**

இலங்கையில் குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் பெண்களில் பலர் ஏதோ காரணங்களுக்காக மனம் ஒடிந்தவர்களாகவும், மிகவும் வருந்துபவர்களாகவும் உள்ளனர். போர்க்காலங்களில் வீட்டுச் சொந்தத் தொழில் முயற்சிகளைத் தொடரமுடியாமல் வேதனையுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

> **"நான் நிர்வாக மட்டத்தில் சிறந்த நிர்வாகியாக இருப்பினும் எனது கணவனை மீறி நான் எந்தவொரு காரியத்தையும் செய்ய முயல்வதில்லை. அவருடைய அனுமதியின் பின்பே எனது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.**

இன்றைய உலகமயமாக்கல் விளைவாக, பெண்களும் ஆண்களும் சமமாக வேலை செய்பவர்களாகவே உள்ளனர். யாழ்ப்பாணத்தில் 65%மான பெண்கள் வேலைக்குச் செல்பவர்களாகவே காணப்படுகின்றனர். எந்தவொரு உயர் பதவி வகிப்பவர்களாக இருப்பினும் பெண்கள் தமது கணவனுக்குக் கீழ்ப்படிபவர்களாகத் தம்மை வெளிப்படுத்துகின்றனர். பெரும்பாலானவர்கள் குடும்பத்தின் ஒழுங்கான செயற்பாட்டிற்கும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களுடைய சம்மதத்தின், அனுசரணையின் ஊடாகத் தமது வெற்றிகளைப் பெற்றுக்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர். தமது மனைவியை விடத் தாம் குறைந்தவர்கள் என்னும் எண்ணம் உருவாகாமல் பார்த்துக் கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர் "எமது சமூகத்தில் ஆண்கள் மேன்மையானவர்களாகவும், பெண்கள் அவர்களுக்கு அடுத்த படியாகவும் கருதப்படுகின்றனர். எனவே

ஆணுக்குப்பின் பெண் என்பதை எதிர்பார்க்க நேரிடும்.

முப்பது வருடகால யுத்தத்தில் பல கஷ்டங்களை அனுபவித்த பெண்கள், யுத்தத்திற்குப் பின்னரும் அத்தகைய யுத்தத்தின் விளைவினால் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். பெரும்பாலான குடும்பங்கள் கணவனை இழந்து கைம்பெண்களைக் கொண்ட குடும்பங்களாகவும், தமது அன்றாட வாழ்க்கைகளைக் கொண்டு நடாத்துவதற்கான வருமானங்களைத் தேடும் பெண்களாகவும் உள்ளனர். கணவனை இழந்த காரணத்தினால் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் மற்றும் தங்கி வாழ்வோரைக் கொண்ட குடும்பப் பெண்கள் அவர்களைக் கற்பிப்பதற்கும் அவர்களது அன்றாட வாழ்வுக்குமாக மிகவும் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. சில பெண்கள் தமது கணவன் மற்றும் குழந்தைகளைப் போரில் பறிகொடுத்தவர்களாகவும், சிலரைத் தேடுபவர்களாகவும் உள்ளனர்.

> **“வாழ்வுக்கு அடிப்படையான வாழ்க்கைத்துணை, குழந்தைகள் இவற்றைத் தொலைத்த பெண் பற்றி பேசிக்கொண்டே இருக்கிறது. மனதளவில் முழுமையான வெறுமையோடு இருப்புக்காக, வாழ்பவர்களாக இருக்கின்றோம். நாங்கள் அடிமைகளாகவும், யாருமற்ற அநாதைகளாகவும் வாழுகின்றோம்.**

பெண்கள் விடுதலை பெறுவதென்பது தனியே கட்டப்பட்ட, சங்கிலிகள் அறுக்கப்பட்ட நிலையல்ல. மனதளவாலும் உயிரளவாலும் அவளுக்கான உரிமை நிலைநாட்டப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப் பட்டதன் பின்பே அது பெண் விடுதலைக்கான முதற்படியாகக் கருதப்படும். யாழ்ப்பாணப் பண்பியல் மற்றும் கலாச்சார மரபுகளைச் சங்க இலக்கியங்கள் ஒத்துப் போயிருப்பினும், இன்று கடந்த முப்பது வருட கால யுத்தத்தின் விளைவால் அழிந்து போன பல வடிவங்கள் , கலாச்சாரப் பிம்பங்கள் மேலும் அழிந்து கொண்டு போவதாகவும், ஆற்றுப்படுத்தப்படாமலும் இற்றைப்படுத்தப்படாமலும் சிதைந்து கொண்டு செல்கின்றது.

> **“பெண்ணடிமைத் தனத்தைப் பற்றிப் பேசவா வேண்டும் சிறு பெண் குழந்தைகளையே காமப்பொருளாக நோக்கும் சமூகத்தில் பெண் விடுதலை, அடிமைத்தனம் பற்றி என்ன பேசப் போகின்றீர்கள்? பெண் குழந்தைகளைப் பாடசாலை சென்று வீடு திரும்பும்வரை நெஞ்சில் நெருப்பைக்கட்டிக்**

**கொண்டிருக்கும் காலமிது நாங்கள் தாயாகப் பெண் பிள்ளைகளை நினைத்துப் பயப்படுகின்றோம்.**

யாழ்ப்பாணச் சமூகத்தில் பல்வேறு விதமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், பெண்கள் சில விடையங்களில் மிகவும் பயந்தவர்களாகவும் அடிமைத்தனத்திலிருந்து மீளாதவர்களாகவும் உள்ளனர். சிறு குழந்தைகள், பருவ வயதுப் பெண்கள் கற்பழிக்கப்படல், சிறுவயதிலே தாயாகுதல் போன்ற பிரச்சினைகள் காரணமாகப் பெண்பிள்ளைகளை வளர்த்தல் ஒரு சவாலாகவே கருதப்படுகின்றது. பெரும்பாலான தாய்மார் தமது பெண் குழந்தைகளின் பாதுகாப்பினை எண்ணி வருந்துபவர்களாக உள்ளனர்.

**"எனது கணவன் எந்த நேரமும் குடித்துக் கொண்டே தனது பொழுதைக் கழிக்கின்றார். அவர் எங்குப் போகின்றனர் என்பது எனக்கும் எனது குழந்தைகளுக்கும் தெரியாது. தினமும் கூலி வேலை செய்து எனது இரண்டு குழந்தை களையும் காப்பாற்றுகின்றேன். ஒவ்வொரு இரவிலும் குடித்துவிட்டுப் பணத்தை எங்களிடமே கேட்கின்றார். நான் என்ன செய்தாலும் அவருக்குப் பரவாயில்லை. குடிப்பதற்கு பணம் கொடுக்க வேண்டும்"**

கைக்குழந்தைகள், பருவம் வந்த பிள்ளைகளைக் குடும்பத்தில் கொண்ட குடும்பத் தலைவர்கள் இவ்வாறு குடிபோதைக்கு அடிமையாகி, குடும்ப அங்கத்தவர்கள் குறிப்பாகப் பெண்களைத் துன்புறுத்துபவர்க ளாகவும், அவர்களை அடிமைப்படுத்துபவர்களாகவும் காணப் படுகின்றனர். இங்குப் பெண்கள் சுதந்திரமாக வேலை செய்வதற்கு வாய்ப்புக்கள் இருப்பினும் மனதில் நிறைந்த வேதனையுடன் குழந்தைகளின் எதிர்காலம், பசி, நிரந்தர வருமானம், நிம்மதியான இரவுகள் என்னும் கனவுடகளுடனும் பணிபுரிய வேண்டிய சூழல் சில பெண்களை வாட்டுகின்றது. மாறாகச் சில பெண்கள் மிகவும் படித்த கல்வியறிவு கொண்ட கணவரிடம் அடிமைப்படுவதையும் பெற்றுக் கொண்ட தகவல்களை ஆய்வு செய்து அறிந்து கொள்ள முடிகின்றது.

**"எனது கணவர் மிகவும் படித்தவர் ஆனால் சம்பளத்துக்காக மட்டுமே தொழில் செய்வதற்கு அனுமதி உண்டு. தொழில் ஸ்தானத்தில் எனது ஒவ்வொரு அசைவுகளும் எனது கணவரால் கண்காணிக்கப்படுகின்றன. சக ஆண் ஊழியர்களுடன் உரையாடுவதைக் கூட அவர் ஏற்றுக்**

கொள்வதில்லை. வீட்டில் முழுவேலைகளையும் நான் ஒரு இயந்திரமாகவும் எனது கணவருக்கு அடிமையான மனைவியாகவே வாழ்வதை அவர் விரும்புகின்றார். எனது வேலைச்சுமை, தொழில் தொடர்பான எனது முன்னேற்றங்களை அவர் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்."

யாழ்ப்பாணத்தில் சில பெண்களின் தரவுகளை ஆய்வு செய்கின்ற போது, அவர்கள் மிகவும் அடிமைத்தனத்திற்குள் முடங்கிப் போயிருப்பதையும், சுயமாக அவர்களால் எந்தத் தீர்மானங்களையும் எடுத்து முன்னேற முடியாத திணிப்புகளுக்குள் உள்வாங்கப் பட்டிருப்பதனையும் கண்டு கொள்ள முடிகின்றது. தமது இளமைப் பருவத்தில் மிகவும் திறைமைசாலிகளாகவும், எல்லாவற்றையும் தற்துணிவோடும் செய்து முடித்த பெண்கள் முழுமையாக ஓட்டுக்குள் ஆமை முடங்கிவிட்டது போன்ற உணர்வுடன் தமது பாரம்பரியம், கலாசாரம், சமூகத்திற்கான பயம் போன்ற காரணங்களால் கணவனுக்கு மேலாகத் தமது சாதனைகளை நிறைவேற்ற முடியாதவர்களாக இதுதான் விதி என்னும் முடிவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மாறாக இன்னொரு பிரிவினர்.

"கணவருக்குச் சமமாக நாமும் வருமானம் ஈட்டிக் கொடுக்கின்றோம். அவர்களை விடவும் அதிகமாகக் குடும்பத்தின் பொறுப்புக்களைச் சுமக்கின்றோம். ஆனால் அவர்களுடைய கட்டுப்பாட்டு வேலிக்குள் அடைத்து கொள்வதென்பது என்ன நியாயம் எமக்கான தனி ஆசைகளை, வெற்றிகளை அடைந்து கொள்வதற்கு அவர்களுடைய ஆணாதிக்கம் மிகவும் தடையாக இருந்தது. அதிலிருந்து மீள்வதற்கு விவாகரத்து ஒரு வழியைக் கொடுத்தது எனது 3வயது பெண் குழந்தையும் நானும் அடிமைத்தனத்திலிருந்து விடுபட நினைக்கின்றோம். ஆனால் எமது சமூகம் பெண்களின் இத்தகைய தற்துணிவை ஏற்றுக் கொள்ளுமா? நிச்சயமாக இல்லை ஒன்றிலிருந்து வெளிவந்து விட்டோம் என்று மகிழ்ச்சியடைவதா? சமூக அழுத்தங் களுக்கு முகம் கொடுப்பதா? என்பது என் மன அழுத்தத்தைச் சற்று அதிகரிக்கச் செய்கிறது"

கணவனைப் பிரிந்துவாழும் பெண்கள் தொடர்பாக யாழ்ப்பாணச் சமூகத்தின் கருத்தும், அதை ஏற்றுக்கொள்ளும் முறைமையும் முழுமையாக மாறிவிடவில்லை. விவாகரத்துக்குள் விரைவாக

உள்நுழையும் பல பெண்கள் அதிலிருந்து மீண்டும் சமூக ஒழுக்கத்தை மீறியவர்களாகவே பார்க்கப்படுகின்றனர். இதனால் விவாகரத்துப் பெற்றவர்களில் சிலர் தாம் பிழையான தீர்மானங்களை எடுத்து விட்டோமோ என அங்கலாய்க்கும் நிலைமைகளும் உண்டு. திருமணம், குழந்தைகள், குடும்பம் என்னும் இறுக்கமான சமூக விழுமியங்களுக்கு அப்பால், இந்த கட்டுக்கோப்புக்குள் சிக்கிக் கொள்ளாமல் தனியாகவே வாழ்ந்து தம்மால் சாதிக்க முடியும் என்னும் தன்னம்பிக்கையோடு பல பெண்கள் வாழ்கின்றனர்.

> **"திருமணம், குடும்பம் என்பது பெண்ணுடைய முன்னேற்றத்தில் பல தடைகளை உருவாக்கி விடும் என்னும் எண்ணம் சிறுவயதிலிருந்தே எனக்கு உண்டு. அதனால் நான் திருமணம் செய்யவில்லை. நான் எப்படி வரவேண்டும் வாழ்க்கையில் எதனைச் சாதிக்க வேண்டும் என நினைத்தேனோ, அதைச் சாதிக்கின்றேன். என்னைக் கட்டுப்படுத்தவும் வரையறை செய்யவும் எவரும் இல்லை. பெற்றோர் நல்வழிப்படுத்துவார்கள். எனக்குப் பிடித்ததைச் செய்கின்றேன். யாழ்ப்பாண மரபு, கலாசாரத்தைக் காப்பாற்றக் கூடியவாறு நடந்து கொள்கின்றேன்.**

ஒரு சுதந்திரத்தை உணர்ந்து கொள்கின்றேன். பல பெண்ணுக்கு நான் ஆலோசகராக இருக்கின்றேன். கணவன்மார்களால் பெண்ணுக்கு ஏற்படும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு வேறு மார்க்கங்கள் மூலம் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு இணைப்பாளராக இருக்கின்றேன். அவர்களுடைய வேதனைகளையும், இதனால் அல்லல்படும் குழந்தைகளையும் எண்ணும் போது எனது முடிவு மிகவும் சரியானதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

கட்டுப்பாடு சம்பிரதாயங்கள் எனப்பார்க்கப்படும் திருமண பந்தத்திற்குள் சிக்கிக் கொள்ளாமல் தனியாகவே வாழ்ந்து தனது உள்மன ஆசைகளை, அடைந்து கொள்ளத்துடிப்பவைகளை நிறைவேற்றும் இப்பெண்கள் தொடர்பாகச் சமூகம் வேறு ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கின்றது. திருமணம், குழந்தைகள் என்பவை ஒரு பெண்ணின் பிறப்புக்கு முழுமையான அர்த்தத்தைக் கொடுப்பதாகவும் தனியே வாழும் பெண்ணின் ஒழுக்கத்தை விமர்சிக்கும் ஒரு மக்கள் கூட்டமும், அவள் பெற்றுவிட்ட வெற்றி முழுமை பெறாத வெற்றியாகவும் கொள்ளப்படுகின்றது. பெண்களின் கல்வியை

முழுமையாக ஆதரிக்கும் யாழ்ப்பாணச் சமூகமானது பெண்கள் திருமணமாகிக் கணவரோடும், அவனது வரையறைக்குள்ளும் பெற்றுக் கொள்ளும் வெற்றிகளையே அங்கீகரிக்கின்றது. ஆயினும் சில தரவுகளைக் கொண்டு பார்க்கும் போது பிரபல்யமான பெண்கள் தமது முயற்சிகள் முன்னேற்றங்கள் தொடர்பான ஆதங்கங்களை வெளிப்படுத்துகின்றனர்.

இன்று ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு நோக்கும் போது பெண்களின் கருத்தானது பின்வருமாறு அமைந்திருந்தது.

"நாம் எவ்வளவு படித்தவர்களாகவும், பட்டம் பெற்றவர்களாகவும் இருப்பினும் ஆண்களுக்கு அறிவுரை கூறுவதென்பது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படமுடியாததாகும். அவர்களை மிஞ்சியவர்களாக எம்மைப் பார்ப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் அவர்கள் விரும்பாதவர்களாக எனது 27 வருட நிர்வாக அனுபவத்தில் நான் உணர்ந்து கொள்கின்றேன்."

ஆனால் இன்றைய போருக்குப் பின்னரான சூழலில் உழைக்கும் பெண்கள் எவ்வாறு நோக்கப்படுகின்றார்கள் என்று இவ் ஆய்வு பகுத்தாராயும் போது.

> **"உழைக்கின்றோம், பணம் சம்பாதிக்கின்றோம் என்பது எம்மைக் குடும்பத்திலும் சரி சமூகத்திலும் சரி முன்னுரிமைப் படுத்திப் பார்க்கவைக்கின்றது. எந்த நிகழ்வுகளிலும் படித்த பெண்ணுக்கான மதிப்பு அதிகமாக இருப்பதாக உணர்கின்றோம். பெற்றோரும் தமது பெண் பிள்ளைகள் தொழில் புரிகின்றார்கள் என்று மகிழ்வதோடு எம்மை முன்னுரிமைப்படுத்துவதாக உணர்ந்து கொள்கின்றோம்."**
>
> **"சாதிப் பாகுபாடு, தொழிலில் உருவாகிய வேற்றுமை எமது பிரதேசத்தில் வெகுவாகக் குறைந்துவிட்டன. சாதியையும், பிறப்பையும் அடிப்படையாகக் கொண்டு எம்மைத் தாழ்த்திப் பார்ப்பது குறைந்து விட்டது. ஏனெனில் பெண்கள் உயர் பதவிகள் வகிப்பதால் அவர்களது குழந்தைகளைப் பராமரித்தல், வீட்டுவேலைகளைச் செய்வதற்கு நாங்கள் தொழிலாளிகளாகப் பணியாற்றுகிறோம். எம்மை வேறுபடுத்திப் பார்க்கும் நிலை மிகவும் இறுக்கமாக இல்லை என்றே நான் கூற விரும்புகின்றேன்"**

குலத் தொழில் என்பது மிகவும் அருகிப் போயுள்ள எமது பிரதேசத்தில், குலத்தை அல்லது பெண்கள் வாழும் பௌதீகச்சூழலை அடிப்படையாகக் கொண்டு அவர்களை ஒதுக்கும் நிலை எமது பிரதேசங்களில் இல்லை என்பதே பெண்களின் கருத்தாகக் கூட கருதப்படுகின்றது. அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களில் அத்தகைய வேறுபாடுகள் காட்டப்படுவதும் அடிமைப்படுத்தப்படுவதும் இல்லை என்பது இவர்களின் கருத்தாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் ஆண்களுக்கு மேலாகத் தமிழ்ப் பெண்களின் கல்விப் புலமையும், வெற்றியும் பேசப்படுவதையும் காணலாம். இங்குப் பெண்களுக்குத் தாமாக விரும்பும் துறையைத் தெரிவு செய்து கற்கும் சுதந்திரம் காணப்படுகின்றது. *கல்வியைப் பொறுத்தவரை இலக்கியத்தில்* கூறப்பட்டதிற்கு ஒப்பாகவும் அதற்கு மேலாகவும் தமிழ்ப்பெண்களின் கல்விச்சுதந்திரம் காணப்படுகின்றது. அவர்கள் தாம் விரும்பிய துறையைத் தெரிவு செய்து கற்று விரும்பும் தொழிலைப் புரிவதற்கும் அதிகாரம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

குழந்தைப் பேறில்லாத மங்கைகளை மலடி என்று கூப்பாடு போட்டு எந்த நிகழ்வுகளிலும் முன்னுரிமைப்படுத்தலும் ஒதுக்கி வைத்த இலக்கியங்களையும் இன்று அந்த நிலைமைமாறாமல் பல பெண்களின் மனங்களை உருக்குலைத்திருக்கின்றது.

> "நேரடியாக மலடியென்று கூறாமல் மனவேதனைப்படுத்தும் பல சந்தர்ப்பங்கள் எனக்குள் எதிராக இருந்திருக்கின்றன. நேராத கோயில்கள் இல்லை இரண்டு முறை சோதனைக் குழாய் முயற்சியும் தோற்றுவிட்டது. குழந்தைகள் கலகலக்கும் குடும்பங்களோடு சேர்ந்து வாழும் போது மிகவும் தர்மசங்கடமாக இருக்கிறது. எனது உறவினர்கள் நேரடியாகப் புண்படுத்தாவிட்டாலும் அவர்கள் கவலைப்படும் போது...எமக்கான ஒருவழியைக் கூறும் போது நெஞ்சைப் பிழிவது போலவும் செத்துவிடலாம் போலவும் இருக்கின்றது.

## ஆய்வின் முடிவுகள்

மூன்று படிமுறைகளை உள்ளடக்கிய "உட்பொருள் குறியீட்டு"ப் பகுப்பாய்வு முறையும் அதன் வெளிப்பாடும் அட்டவணை இல் குறித்தும் காட்டப்படுகிறது. இன்றைய 21ம் நூற்றாண்டில் போரினால் பாதிக்கப்பட்ட

பிரதேசங்களில் வாழ்கின்ற பெண்கள், துன்பியல் நிலையிலிருந்து முற்றிலும் விடுபட்டவர்களாக அவர்கள் தம்மை உணர்ந்துகொள்ள வில்லை. இவ் ஆய்வானது துன்பியல் என்பதை அவர்கள் எவ்வாறு உணர்ந்து கொள்கின்றார்கள்? என்றும் அவர்கள் மூலமாக, இன்றைய துன்பியல் எப்படி உள்ளது? என்பதை ஆய்வு செய்வதாகும். இலங்கையில் வடக்கு மாகாணமானது ஏனைய தமிழ்ப்பிரதேசங்களில் இருந்து வேறுபட்டதாகும். நீண்ட 30 ஆண்டுகால யுத்தத்திற்குப் பின்னர்ப் புத்துருவாக்கம் பெறும் இப்பிரதேத்தில் பெண்கள் பல்வேறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவர்களாகவும் பிரச்சினைகளோடு வாழ்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவ்வாய்வின் நோக்கம், இலக்கியத்தில் பேசப்பட்ட பெண் அடிமைத்தனம் இன்றைய வடமாகாணத் தமிழ்ப் பண்பாட்டுக்குள் காணப்படுகின்றதா? வேறுபாடுகள் இருக்கின்றதா? என்பதை ஆராய்வதாகும்.

பெண்கள் கல்வி பெறுவதற்கும், உழைப்பதற்குமான சுதந்திரம் காணப்பட்ட போதும் கல்வி பெற்ற பெண்களும் உழைக்கும் பெண்களில் பலரும் பெண்ணடிமைத்தனத்திலிருந்து முழுமையாக விடுபட்டதாக உணர்ந்து கொள்ளவில்லை. அவர்களுடைய வெளிப்படையானது ஏதோ ஒரு வகையான அடிமைத்தனம் தமக்கிடையே திணிக்கப்பட்டதை உணர்ந்து கொள்பவர்களாகவே இருக்கின்றனர்.

தினமும் 8மணி நேரமான கட்டாய வேலை, வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, அளவுக்கு மீறிய சுமைகளைச் சுமந்து கொள்ள வேண்டியும் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமைகளும் இருப்பதோடு தமது தொழில் ஸ்தானங்களில் நிர்வாகச் சிக்கல்களைச் சமாளிக்க வேண்டிய கட்டாயமும் அவர்களிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கும் கல்விக்கும் அவர்களே பொறுப்பாளர்களாகவும் தங்கி வாழ்வோரைப் பராமரிக்கும் அதேவேளை கணவருக்கு அடங்கியவளாகவும் வாழ வேண்டும்.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் போன்ற நவீன கொள்கைகளின் பால் கடுமையாக உழைக்க வேண்டிய பெண்கள் பலர் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் பொறாமலும், நாளாந்த வாழ்வுக்குத் தேவையான உழைப்புக்கான வழியின்றி அலைபவர்களாவும்

காணப்படுகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடுபவர்களாகவும் இறந்து போனவர்களுக்காக வேதனைப்பட்டு அலைந்து திரிபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அதிக ஊதியம் பெறும் இடங்களில் கூடுதலான பணிச்சுமை மற்றும் அதனால் ஏற்படும் மனஅழுத்தம் என்பவற்றிற்கு ஆட்பட்டுத் திண்டாடுபவர்களாக உள்ளனர்.

நிரந்தரமற்ற வேலை, எட்டு மணி நேரம் கடந்தும் ஏறத்தாழப் பத்துமணி நேரங்கள் உழைப்பவர்களாகவும், இளம் வயதிலியே வேலைக்குச் சென்று வேலைப்பளு அதிக பணி, விடுப்பு, மகப்பேறு, கணவர் சார்ந்த பிரச்சினைகளால் அவர்கள் தமது திறமைகளை நிலைநாட்டித் தக்கவைத்திருப்பதென்பது பெரும் சிக்கலாகக் காணப்படுகின்றன.

படித்து உயர் பதவி, உயர் வருமானம் பெறும் பல பெண்களில் சிலர் வாழ்க்கைத் துணையின் அடிமைத்தனத்திற்குள் அகப்பட்டு வெளியே வரமுடியாதவர்களாவும், சிலர் கணவருக்குப் பணிந்து அதனூடாக மட்டும் சாதித்தவராகவும், சிலர் அவ்வடிமைத் தனத்திலிருந்து வெளிவந்து வெற்றி பெற்றவர்களாவும், சிலர் சிறந்த வாழ்க்கை தலைமைத்துவம், அடிமை கொள்பவர்களாவும், ஆதிக்கம் செலுத்தி எத்தீர்மானங்களையும் நிறைவேற்றும் ஆதிக்கம் கொண்டவர்களாவும், கணவனை அடிமைப்படுத்துபவர்களாகவும் உள்ளனர்.

தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய பல பெண்கள் மானமிழந்து இறந்து போனதாகவும், காணாமல் ஆக்கப்பட்டதாகவும் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இறந்து போன கணவனை நினைத்து வாழும் கைம்பெண்களின் சோகம் ஒரு புறமும் காணாமல் ஆக்கப்பட்ட கணவன், மற்றும் பிள்ளைகளைத் தேடும் பெண்கள், தமது சொந்த இடங்களில் குடியேறி வாழ வேண்டும் என்பதற்காகப் போராடும் பெண்கள் எனப் பெண்கள் தம் கணவனூடாகத் தம்மைப் பார்க்கும் பார்வை பல பரிமாணங்களைக் கொண்டது

காதலில் ஆரம்பிக்கும் உறவுகள் திருமணங்களின் பின் பிரச்சினைகளில் சிக்கித்தவித்து விவாகரத்துவரை சென்று குடும்பங்கள் பிரிந்து அதனால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகளைப் பெண்கள் எதிர்கொள்கின்றனர்.

சிறு பெண் குழந்தைகள், முதல் இளம் பெண்கள் வரை வன்புணர்வுக் கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதும், இதனால் பெண் குழந்தைகளைக் கொண்ட பெண்கள் மிகவும் பயந்தவர்களாவும் இதற்கான நிரந்தரத் தீர்வு கிடைக்கப் பெறாதவர்களாவும் காணப் படுகின்றனர். மாறாக இன்னொரு தொகுதிப் பெண்கள் சமூக வலைத் தளங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் என்பவற்றிற்கு அடிமையாக முழுமையாக நவீனத்துவப் போக்கிற்கு மாறி, ஆடையணிகள், பண்பாடு, கலாசாரம், நடத்தை என்பவற்றில் தமிழருக்கே உரித்தான பண்புகளை அழிப்பவர்களாகவும் மேலைத்தேய நாகரீகத்தில் அடிமைப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

## ஆய்வின் வரையறைகள் மேலதிக ஆய்வுக்கான ஆலோசனைகள்

ஆய்வாளர் தனக்கு கிடைத்த குறுகிய நேரத்தை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வினை நிறைவு செய்கின்றார். தரவு சேகரிப்பின் போது பெண்கள் முழுமையாகத் தமது துன்பியல் நிலைமையினை (ஆய்வாளர் ஒரு பெண்ணாக இருந்த போதிலும்) வெளிப்படுத்துவதற்கு தயக்கம் காட்டினார். தமது உள்ளார்ந்த பிரச்சனைகள் வெளியில் தெரிந்துவிடுமோ எனத் தயக்கம் காட்டினார். பெரும்பாலானவர்கள் தரவுகள் வழங்குவதற்கு அதிக நேரத்தை ஒதுக்க விரும்பவில்லை. குறிப்பிட்ட ஆய்வானது பெண்களின் துன்பியல் நிலை கூறும் அனைத்து இலக்கங்களையும் வெளிப்படுத்தவில்லை ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட துன்பியல் வகையோடு ஒத்துப்போகும் இலக்கிய உள்பொருள்களை மட்டுமே ஒப்பீடு செய்திருக்கின்றது. மேலும் பல துன்பியல் வகைகளை அடையாளம் காண்பதற்குப் பல பெண்களிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டு இவ் ஆய்வானது மேலும் விரிவுபடுத்தப்படலாம்.

## உசாத்துணைகள்

1. தாயம்மாள் அறவாணன், இலக்கியத்தரவுகளில் மகளிர் பதிவுகள் ப. 20
2. தொல்காப்பியர், கற்பியல் 2 பக்கம் 338
3. சந்திரவதனா (2005) புலம்பெயர், வாழ்வில் தமிழ்ப் பெண்கள் தமிழ்மணம்இ Pennkalblogspot. com/205/7/21
4. சஞ்சீவி சிவகுமார் (2008), இலக்கியத்தை விற்பனைப் பொருளாக்க பெண் பற்றிய வர்ணனைகள்

5. சந்திரவதனா செல்வகுமார் (2004). பிரசுரம். ஈழமுரசு 03/08/2014. பெண் ஏன் அடக்கப்பட்டாள். .

6. பி. இரயாகரன் (2001) ஆணாதிக்கமும் பெண்ணியமும். கீழைக்காற்று வெளியீட்டகம்

7. தமிழ்த்துறைப் பேராசிரியர் (தொகுப்பு) 2008 பெண்ணும் பெண்மையும். நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ் (லிட்)

8. பார்வதி கந்தசாமி (1989) இன்னுமொரு ஜாதி. இலங்கைத் தமிழ்ப்பெண்கள். ஆய்வு மட்டம்

9. குமாரி ஜயவர்த்தன (2003) மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும். சமூக விஞ்ஞானிகள் சங்கம்

10. சித்திரலேகா மௌனகுரு (1983). பெண்நிலைச் சிந்தனைகள். பெண்கள் ஆய்வுக் கல்வி நிலையம் கொழும்பு

11. அப்த்தல் லிம் ஆபூஷக்கா (2015) பெண்விடுதலை. Fuzin Text.

12. பாலுமணிவண்ணன் (2008) மண்ணும் பெண்ணும் பாலை பப்ளிகேஷன் வெளியீடு

13. செல்வ அம்பிகை நந்தகுமரன் (குறுந்தொகைப் பாடல்களின் பொன்மொழி) Conference Proceedigs, Jaffna University International Research conference – 2014

14. குறுந்தொகைப் பாடல்களின் பொன்மொழி. Conference Proceedings. Jaffna University International Research Conference-2014

15. யாழ்ப்பாணம் பெண்களது சமூக முன்னேற்றத்தில் அமெரிக்க மிஷனின் வகிபாகம் (கல்வியை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வு) Conference Proceedings, Jaffna University international Research Conference -2014

16. அகநானூறு மார்ரே ஆண்டு கம்பனி சென்னை 1958 Conference Proceedings, Jaffna University International Research Conference -2014

17. அருள். வி. சங்க இலக்கியம் எழுத்துரைப்பியலும் உணர்வுக் கட்டமைப்பும் 'குறிஞ்சி' கருத்தரங்குக் கட்டுரைகள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலயக்கியத்துறை வெளியீடு (2007)

18. மனோன்மணி சண்முகதாஸ். செவ்வியல். தமிழ் இலக்கியத்தில் பொன்மொழி. சர்வதேச எழுத்தாளர் மாநாடு சிறப்புமலர் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் இலங்கை 2011

19. முருகேச பாண்டியன் சங்கப் பெண்கவிஞர்களின் கவிதைகள் மூலமும் உரையும் மரதா வெளியீடு சென்னை (2005)
20. செ. அனந்தம்மாள் (2011). வாழ்க்கைத் துணைநலம் காட்டும் பெண்மை. வள்ளுவரின் பெண்மொழி
21. முனைவர். அ. சாவித்திரி (2011) பெண்மையைப் போற்றும் தெய்வப்புலவர். வள்ளுவரின் பெண்மொழி
22. சொ. சேதுபதி (2011) புதுமைப் பெண்ணுக்கு ஜீவா காட்டிய பொதுமறையாளர். வள்ளுவர்
23. அ. இலட்சுமி (2011) திருக்குறளும் நால்வருணப் பாகுபாட்டுப்பெயர்களும். வள்ளுவர் பெண்மொழி
24. De Mel, Neloufer (2013) The Promise of the LLRC: Women's Testimony and Justice in PostWar Sri Lanka, ICES Research Paper 4, February 2013.
25. Place of Women in Sri Lankan Society: Measures for Their Empowerment for Development and Good Governance H. M. A. Herath University of Sri Jayewardenepura, Sri Lanka, VJM 2015, Vol. 01 (1) 01-14 Copyright © University of Sri Jayewardenepura ISSN 2448-9344 Reprints and permissions: vjm@sjp. ac. lk
26. Sepali Guruge, Brenda Roche, and Cristina Catallo (2012). Violence against Women: An Exploration of the Physical and Mental Health Trends among Immigrant and Refugee Women in CanadaHindawi Publishing Corporation Nursing Research and Practice Volume 2012, Article ID 434592, 15 pages doi:10. 1155/2012/434592.
27. Lincoln, Y. S., & Guba, E. (1985). Naturalistic inquiry. Beverly Hills, CA: Sage.
28. Rust, R. T., & Cooil, B. (1994). Reliability measures for qualitative data: Theory and implications. JMR, Journal of Marketing Research, 31 (1). 1–14. Doi: 10. 2307/3151942.
29. Strauss, A. (1995). "Notes on the Nature and Development of General Theories. " Qualitative Inquiry 1 (1) : 7-18.
30. Strauss, A. & J. Corbin (1990). Basics of Qualitative Research. California, Sage Publications.

31. Strauss A, Corbin J. ( 1990) Basics of Qualitative Research: Grounded Theory Procedures and Techniques. Sage,

32. Silverman, D., & Marvasti, A. (2008). Doing qualitative research: a comprehensive guide. Thousand Oaks, CA: Sage.

View publication stats